# மராட்டியர்கால நடனக் கலை

47

பவித்திரா வசந்தரூபன்,
போதனாசிரியர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

ஆய்வு நோக்கம்:- மராட்டியர் காலத்து நடன நிலை பற்றி மாணவ மாணவிகள் அறிந்து கொள்வதற்காகவும், மராட்டியர் காலத்தில்; நடனத்தினை கட்டியெழுப்ப மன்னர்கள் ஆற்றிய பங்கினை அனைவரும் அறிந்து கொள்வதற்காகவும் எனது இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுச்சுருக்கம்:- மராட்டியர் எவ்வாறு தஞ்சையை ஆள வந்தனர் என்றும், மராட்டியர் கால மன்னர்கள் பற்றியும், அவர்கள் ஒவ்வொருவரின் ஆட்சிக்காலத்திலும் நடனத்தினை வளர்க்க அவர்கள் செய்த செயல்கள், மன்னர்கள் நடனத்திற்கு ஆற்றிய தொண்டோடு அவர்களின் திறமைகளையும், கலைகளை வளர்க்க அவர்கள் ஆற்றிய ஒத்துழைப்புக்கள் மற்றும் இவர்கள் காலத்தில் நடனத்திற்கு பெரும் மாற்றத்தினை கொண்டு வந்த தஞ்சை நால்வர் பற்றியும் அவர்களின் வழித்தோன்றல்கள் அர்கள் நடனத்தினை ஒருங்கிணைத்து கொண்டுவந்த விதம் பற்றியும் கூறப்படுகின்றது.

திறவுச்சொற்கள்:- மராட்டியர், மன்னர்கள், நடனம், ஆலயம்

தலைப்பு அறிமுகம்:- மராட்டியர் கால நடனக்கலை

**மராட்டியர் கால நடனக்கலை**

மனித வரலாற்றிலே கலைகள் ஓர் முக்கிய இடத்தை பிடிக்கின்றன. அவை மக்களது வாழ்வினை செம்மைப்படுத்தியும், வளம்படுத்தியும் வந்துள்ளன. கலையறிவானது மக்களிற்கு மனித பண்பினை வளர்க்க உதவுகின்றன. ஆதிகாலம் தொட்டு தமிழரது வாழ்வோடு இக்கலைகள் ஒன்றினைந்து வழங்கி வந்துள்ளன. இவ்வாறான ஆடற்கலைகள் 64 ற்குள்ளும் இசையும், நடனமும் குறிப்பிடத்தக்கவை. அதிலும் நடனக்கலை கலைகளிலே சிறந்ததும் மேன்மையானதுமாகும். தமிழ் நாட்டிற்கே உரிய பாரம்பரிய நடனக்கலையாக விளங்குவது பரத நாட்டியமாகும்.

மனிதனது உள்ளத்து உணர்வுகளை தெளிவாக எடுத்துக்காட்டுவன அவனது செயற்பாடுகள். அவ்வகையிலே ஆதிமனிதனது முதல் மொழியாக அமைந்தது அவனது உடல் அசைவுகளே. மனிதர்கள், விலங்குகள் போல் அலைந்து திரிந்த காலத்தில் கூட அவனது பகுத்தறிவுத்தன்மையின் காலத்தினால் தனது உள்ளத்து உணர்வுகளை மன எழுச்சிகளை தனது கை. கால் அசைவுகளின் மூலமாக மற்றவர்களிற்கு வெளிப்படுத்த முற்படலானான். இதன் காரணமாக பேச்சுக்கலை மற்றும் எழுத்துக்கலை என்பன தோன்றுவதற்கு முன்பாகவே

நடனக்கலை தோன்றியது எனலாம்.

நுண்கலைகளில் ஒன்றாகிய நடனக்கலை சிந்துவெளி காலந்தொட்டு இன்றுவரை பல்வேறு பரிணாமங்கள் பெற்று வளர்ந்து வந்துள்ளமையை தொல்பொருட்கள், இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

தமிழ் இலக்கியங்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது நடனமானது உலகியல் சார்புள்ளதாகவும், இன்பமளிக்கும் அழகியல் கலையாகவும் விளங்கியது. முற்காலத்தில் நடனமானது கூத்து, ஆடல், குனிப்பு என அழைக்கப்பட்டது. ஆடுவோர் கூத்தர், தோடியர், கண்டுளர், விறளியர் என அழைக்கப்பட்டனர். சங்கமருவிய காலத்தில் ஆடுவோர் ஆடுகளம் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. மாதவி அக்கால சாஸ்திரிய நடனங்களில் சிறந்து விளங்கினால். சிலப்பதிகாரம் அக்கால நடனக்களஞ்சியமாக விளங்கியது. பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியத்தின் விளைவாக இசையும் நடனமும் இறைவனை எய்துவதற்கு சிறந்த சாதனமாக விளங்கியது. நித்திய, நைமித்திய பூஜைகளிலும் நடனம் இடம்பெற்றது. அக்கால சிற்பங்களும் நடனக்கலை பற்றி விளக்குகின்றது. சோழர்காலத்தை எடுத்து நோக்கும் போது தேவரடியார்கள் நாட்டியப்பணி செய்து வந்துள்ளனர். 108 கரணங்கள் தோற்றம் பெற்றுள்ளன. நடனமகளிர்க்கு தலைக்கோலி பட்டம், மானியம் போன்றன வழங்கப்பட்டன. விஜயநகர நாயக்க மன்னன் காலத்தை தொடர்ந்து கச்சேரி அமைப்பு பற்றியும் அறியக்கூடியதாகவும் உள்ளது.

கி.பி 15-18ம் நூற்றாண்டு காலப்பகுதியே மராத்தியர் காலமாகும். தஞ்சை நாயக்கர்களை தொடர்ந்து தஞ்சையை ஆட்சி செய்தவர்கள் மராட்டியர்கள். இவர்கள் ஏறத்தாழ 676 ஆண்டுகள் தஞ்சையை தலைமையாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர். இவர்களுடைய ஆட்சிக்காலத்தில் நாட்டியக்கலை சிறந்து விளங்கியமையை வரலாற்றாசிரியர்களின் ஆய்வுக்குறிப்புக்களும் சான்றாக அமைகின்றன.

தஞ்சை நாயக்கர்களின் கடைசி மன்னனான செங்கமலதாஸ் தனது ஆட்சியை மர்ரை நாயக்கர்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக பீஜப்பூர் சுல்தானின் உதவியை நாட அவர் தனது தளபதி ஏகோஜியிடம் தலைமையில் படையை அனுப்பினார்.

ஏகோஜி மதுரை நாயக்கர்களை வென்று செங்கமலதாஸிடம் மதுரையை ஒப்படைத்தார். ஆதன் பின்னர் ஏற்பட்ட உட்பூசல் காரணமாக அவர்களால் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியாமையால் ஆட்சியை ஏகோஜியிடம் ஒப்படைக்கின்றனர். அதுவே மராட்டியர்கள் கையில் தஞ்சை செல்வதற்கு காரணமாகியது.

கி.பி 1676ல் ஏகோஜி பொறுப்பேற்றார். அவரைத்தொடர்ந்து 1684ல் ஷாஹாஜியும் பொறுப்பேற்றார். நாயக்கர் காலத்தில் வேளாண்துறையும் வணிகத்துறையும் வளர்ச்சி பெற்றிருந்தது. அதனை மேம்படுத்தி ஓர் உன்னத நிலை அடையச்செய்த பெருமை மராத்தியர்களையே சாரும்.

நாயக்கர்காலத்தைப்போன்றே மராத்தியர் காலத்திலும் மன்னனை தெய்வமாக வழிபட்டனர்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

"ஆண்டவனின் மறு அவதாரமே ஆள்பவன் என இன்னமும் கருதப்பட்டாலும் பெயர் மட்டும் "ராமநாம"த்திலிருந்து "சிவாயநம" ஆயிற்று. மன்னனை நாயகனாய், காதலனாய், கடவுளாய் நினைத்து கணிகையர் பதம் பாடியுள்ளர்.

தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களின் ஆட்சிக்காலங்களாக

1. வெண்கோஜி எனும் ஏகோஜி- கி.பி 1676-1684
2. சகாஜி கி.பி-1684-1712
3. சரபோஜி கி.பி 1712-1729
4. துக்காஜி கி.பி 1728-1736
5. ஏகோஜீii கி.பி 1736-1737
6. சயாஜி கி.பி 1738
7. பிரதாப் சிங் கி.பி 1739-1763
8. துளஜாrii கி.பி 1763-1787
9. அமர்சிங் கி.பி 1787-1796
10. சரபோஜி ii கி.பி 1796-1832
11. சிவாஜி ii கி.பி 1832-1855

இவர்களின் ஆட்சிக்காலத்திலே கலைகள், இலக்கியங்கள் சிறந்து விளங்கின. மராத்திய மன்னர்கள் அணைவரும் கல்வி கலை போன்றவற்றில் சிறந்து விளங்புகின்றனர். ஏகோஜி சமஸ்கிருதம், தெலுங்கு போன்றவற்றில் புகழ்பூத்த கல்விமானாகத்திகழ்கின்றான். தெலுங்கில் துவிபத ராமாயனத்தை படைத்தார்.

இரண்டாம் சகாஜி இவர் சங்கீதத்திலும் சாகித்தியங்களிலும் திறமை கொண்டவர். இவர் "சந்திர சேகர விலாசம், சப்தார்த்தசமக்வயம், சப்தார்த்த சங்ரஹ, சிருங்கார மஞ்சரி ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவரது காலத்தில் பல தமிழ் நாடகங்கள் அரங்கேறின.

முதலாம் சரபோஜி இவரும் தனது சகோதரர் போலவே கலைகளில் சிறந்த விளங்கினார். கல்விமான்கள், பேரறிவாளர்களிற்கு சரபெஜி ராஜபுரம் எனும் சிற்றூரைத்தானமாக வழங்கியுள்ளார்.

முதலாம் துளஜா அவர்கள் சங்கீத சாராமிருதம் எனும் நூலினை எழுதியுள்ளார். பதங்கள் தருக்கள் 'ஸ்வரஜதிகள் என்பவை வளர அவரே காரணம். இவர் அறிஞர்கள், இசை வல்லுனர்கள், கவிஞர்கள், நடனக்கலைஞர்கள் போன்றோரை கௌரவித்து பரிசிலும் வழங்கி வந்துள்ளனர். இவர் தெலுங்கில் இயற்றிய சிவகாமசுந்தரி பரிணயம் இவரின் பன்மொழித்திறமைக்கு எடுத்துக்காட்டாகும்.

இரண்டாவது ஏகோஜி இவர் ஒரு வருடம் மட்டுமே ஆட்சி செய்துவிட்டு இயற்கை எய்திவிட்டார். இவர் நீதிபதம், சிருங்கார பதம், மராத்தி பதம், கீர்த்தனைகள் என எண்பத்தி ஐந்து படைப்புக்களை படைத்துள்ளார்.

பிரதாபசிம்மன் முதலாம் துளஜாவின் மகனான இவர் மராட்டிய மன்னர்களில் சிறந்து விளங்குகிறார். இவர் பல பதங்கள், நாடகங்களையும் படைத்துள்ளார். ஏறத்தாழ 12 நாடகங்களை மராட்டிய மொழியில் படைத்துள்ளார். வடக்கில் தரனா எனும் இசை வடிவம் இவருடைய காலத்திலேயே தில்லானா எனும் பெயரில் அழைக்கப்படலாயிற்று.

இரண்டாம் துளஜா காலத்தில் இசைப்பேரறிஞர்கள், நாட்டியத்தாரகைகள் அவனது அரசவையை அலங்கரித்தனர். இவன் வீணை வாசிப்பதில் திறமை கொண்டிருந்தான்.

அமர்சிங் மராத்திய மொழிகளில் பாடல்கள் நாடகங்கள் இயற்றியுள்ளார்.

இரண்டாம் சரபோஜி இவரும் தனது ஆட்சிக்காலத்தில் இசைமேதைகளையும், நாட்டியதாரகைகளையும் கௌரவித்துள்ளான். தன்னுடைய சொந்த நூல்களாலும் பனை ஓலைச்சுவடிகளால் “சரஸ்வதி மஹால்” எனும் நூலகத்தினை நிறுவினர்.

இரண்டாம் சிவாஜி இவர் மற்றய மன்னர்களைப்போவே கலைகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார். அத்தோடு தமிழ்மொழி, தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அதிகம் ஆர்வம் காட்டியுள்ளார்.

மராத்தியர் காலத்தில் பல நூல்கள் எழுதப்பட்டன. அவற்றில் சஹேந்திர விலாசம், சங்கீத சாராமிர்தம், ருக்மாங்கத சரித்திரம், அபிநயதர்ப்பணம், சங்கீத சம்பிரதாய பிரதர்ஷணி என்பவையே அவையாகும். இவர்களுடைய காலத்திலேயே யட்சகானம் எனும் நாட்டிய வடிவும் பிரபந்த வகை இலக்கியமும் ஒன்றினைந்து புதிய வகை நாட்டிய நாடகம் உருவாக்கப்பட்டது. அவ்வாறு வந்த நாட்டிய நாடகத்தினை தீரிஷ்ய காவியம் என பெயரிட்டனர். இதில் நிருத்தம், அபிநயங்கள் இணைந்து ஆடப்படுகின்றன.

அத்தோடு பல்லக்கி சேவை எனப்படும் இறைவனை பல்லக்கில் தூக்கி தூக்கி நிற்பவர்கள் தாளம் பிசகாமல் தாள லயத்துடன் அடி எடுத்து வைத்தல் வேண்டும். விஷ்ணு பல்லக்கி சேவா எனும் நாட்டிய நாடகத்தில் பக்க வாத்திய இசைகளுடன் பாடலை பாடிக் கொண்டும் நடனம் ஆடிக் கொண்டும் இறைவனை தூக்கி வருவர்.

பஞ்சரத்தின பிரபந்தம் எனும் நூலில் இரண்டு பெண்கள் நட்டுவனார், குறவர் மற்றும் பணியாள் என ஐந்து நபர் இணைந்து இசைக்கு ஏற்றாற்போல தாள லயத்துடன் ஆடியுள்ளமையை கூறுகின்றது. கோர்வைகள், ஜதிகள், கணபதி கௌத்துவம், தரு போன்றன அமைக்கப்பட்டுள்ளன.

மராத்தியர் காலத்தில் மூன்று வகையான நடனம் இடம்பெற்றுள்ளது. அவை,

1. தேவ நடனம் - இறைவன் முன் ஆடப்படுவது.
2. ராஜ நடனம் - மன்னர் முன் ஆடப்படுவது.
3. தேசி நடனம் - மக்கள் முன் ஆடப்படுவது.

இவற்றில் எது சிறந்தது என சிவபெருமானும் காளியும் விவாதம் செய்து தேசி நடனமே சிறந்தது என முடிவெடுத்து தேசி நடனம் ஆடினர். இதற்காக சாவராஜி மன்னன் 55 தருக்களை

உருவாக்கியுள்ளான். இத்தருக்களில் பறவைகள், விலங்குகள், மலர்கள் மக்கள் என பல பாத்திரங்களை படைத்துள்ளமையால் இதனை ஆடுபவர்கள் ஹஸ்த அபிநயங்களை தங்களுடைய கற்பனைக்கு ஏற்ப செய்துள்ளனர்.

பிரபந்தங்கள் மூன்று வகைப்படுகின்றன. அவையாவன,

1. ப்ராக்யார்த்த பிரபந்தம் - இதிகாச புராண கதையின் அடிப்படையில் எழுந்தவை.
2. உத்பதிய பிரபந்தம் - கவிஞனின் கற்பனையில் எழுந்தவை.
3. மிஸ்ர பிரபந்தம் -இதிகாச புராணங்களில் உள்ள நிகழ்வுகளை கவிஞன் தனது கற்பனையில் கூறுவது.

சரபோஜி மன்னன் "நிரூபணம்" எனும் நாட்டிய வகையை உருவாக்கியுள்ளார். அவை ஒரு கதையின் கருவை விரிவாக விபரித்து நிற்பவையாகும். இவ் நிரூபணத்தில் ஜெய ஜெய, சரணு, அலரு, சொல்லு, சப்தம், வர்ணம், பதம், ஸ்வரஜதி, அபிநய பதம், தில்லானா, அர்ஜிதபதம், ஜக்கினி கீதம், பிரபந்தம், திரிபதம், ஸ்லோக வர்ணம், கௌத்துவம், மங்களம் எனும் பதினெட்டு உறுப்புக்கள் இடம்பெறுகின்றன. இப்பதினெட்டும் ஒரே ராகத்திலும், ஒரே தாளத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. இவை இறைவாழ்த்துடன் ஆரம்பித்து மங்களத்துடன் முடிவடைகின்றது. இவை ஒரு தனி நபர் ஆடும் நடனமாகவே அமைக்கப்பட்டுள்ளது.

சகாஜி எழுதிய பிரபந்தம் எனும் இலக்கியம் நாட்டியத்திற்கென எழுதப்பட்டதாகும். பிரபந்தங்கள் தனி ஒருவரின் சிருங்காரமாக எழுதப்பட்டாலும், பின்னர் அவை புராண, இதிகாச கதைகளையே நிகழ்த்துவதாக காணப்படுகின்றன. அவ்வாறு வந்தவையே உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ்.

சரபோஜி எழுதிய "நிரூபணம்" எனும் இலக்கியம் பதினெட்டு விதமான பாடல் வடிவங்களை பற்றி கூறியுள்ளது. இவை பிற்காலத்தில் தோன்றிய நடன மார்கீகத்தின் உருப்படிகளை கொண்டிருப்பதால் நிரூபணம் மாhர்க்கத்தின் அடிப்படையாக இருந்திருக்க வேண்டும்.

மராத்தியர் காலத்திலேயே தேசி, மார்க்கம் எனும் இரண்டு வகையான நடன வகை காணப்பட்டுள்ளது.

1. தேசி- மக்களிற்கு உரியது
2. மார்க்கம்- அறிஞர்களிற்கு உரியது

இவை சிலப்பதிகாரத்தின் வேத்தியல், பொதுவியலுக்கு ஒப்பானவை.

இக்காலத்தில் "நாட்ச்" எனும் புதிய வகையான நாட்டியம் உருவாக்கப்பட்டது. நாட்ச் என்றால் வடநாட்டு நடனமும், நாட்டுப்புற வடிவங்களும் இணைந்து உருவாக்கப்பட்டதாகும். நாட்ச் எனும் சொல்லின் பொருள் நடனம் என்பதாகும். பல்வேறு வகை நாட்ச் அரசவையில் ஆடப்பட்டன. அவை ஜக்கினி, பேரணி, த்ருபத நாட்ச், தேசி நவபத நாட்ச், காஞ்சின் நாட்ச், கொண்டல், கோப், கர்பா நடனம், சங்கீத மேளம் லேடீஸ் நாட்ச், திப்பிரி, சித்திர நாட்டியம்.

மராட்டியர்களின் சிறந்த படைப்பாக கருதப்படுவது யட்சகானம். இதில் இலக்கியத்தின் தரம்.

இசை நடனம் என்பவை சிறப்புற்றுக் காணப்படுகின்றன. யட்சகானம் சிருங்கார ரஸத்தை மையமாகக் கொண்டு எழுந்துள்ளது. சந்திரசேகர விலாச நாடகம் யட்சகான நாடகத்தில் ஒன்றாகும். மராட்டியர்களின் இன்னொரு வகை நடனமாக குறவஞ்சி காணப்படுகின்றது. இது தேசி வகை நாட்டியமாகும். இக் குறவஞ்சியானது இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழால் உருவாக்கப்பட்டது. இது பாமர மக்களிற்கு பக்தி, இறை வழிபாடு போன்றவற்றிற்காகவும் உருவாக்கப்பட்டதாகும். சஹாஜி ராஜ குறவஞ்சி, தியாகேச குறவஞ்சி,வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, குற்றாலக் குறவஞ்சி போன்றன சிறந்த குறவஞ்சிகளாகும்.

அடுத்து இக்காலத்தின் சிறப்பாக அமையப் பெற்றது பாகவத மேள நாடகமாகும். ஆலயத்தின் உட்பிரகாரங்களில் மட்டுமே இது ஆடப்படுகின்றனது. இது நிருத்தம், நிருத்தியம் நாட்டிய பண்புகளைக் கொண்டது. நரசிம்ம ஜெயந்தி விழாவில் இன்று வரை நடிக்கப்பட்டு வருகின்றது.

அடுத்து ஸ்வரஜதியினை எடுத்துக்கொண்டால் இராகத்தின் ஸ்வரங்கள், தாளத்தின் ஜதிகள் எனும் இரண்டையும் இணைத்து உருவாக்கப்பட்டதாகும். நாட்டிய ஸ்வரஜதி, இசைஸ்வரஜதி, அப்பியாசகானம் எனும் மூன்று வகை ஸ்வரஜதிகள் உண்டு.

மராட்டியர் காலத்திலேயே பதவர்ணம் சேர்க்கப்பட்டதாக கூறப்படுகின்றது. தாளவர்ணம் போன்று விறு விறுப்பாக பதவர்ணம் இருப்பதில்லை. இவை முதலில் கன்னடமொழியில் செய்யப்பட்டது. இதனை வர்ணப்பிரபந்தம் என்று அழைப்பர். இப்பதவர்ணம் ஸ்வரம், பதம், பாடல், தேனகா போன்ற உறுப்புகளைக் கொண்டுள்ளது.

சாகித்தியங்களும் சொற்கள், ஸ்வரங்கள், சொல்லுக்கட்டு எனப்படும் ஜதிகள் போன்றவற்றைக் கொண்டதே முழுமையான பதவர்ணமாகும். பல்லவி, அனுபல்லவிக்கிடையில் ஜதிகள் இடம்பெறும். புதவர்ணங்களின் பாடுபொருள் பக்தி, சிருங்காரம் அல்லது தனி நபரின் துதியாக அமைந்திருக்கும்.

அடுத்து இக்காலத்து தில்லானவை எடுத்துக் கொண்டால் நளினதும் மிக்கதும், மக்களை கவர்ந்திழுக்கும் தன்மை பெற்றதாகவும் காணப்படுகின்றது. ஸ்வரங்கள், சாகித்தியங்கள், இசை நயமிக்க ஓசைகள் ஒன்றிணைந்த கலவையே இது. தாள லயத்துடன் வாய்மொழியாய் பாடப்படும் ஜதிகளின் வளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய கொன்னக்கோலின் அடுத்த பரிணாம வளர்ச்சியே தில்லானாவாகும். இது தரனா தில்லானா எனவும் அழைக்கப்படுகின்றது. தி, ரா, நா என்னும் ஒரசை ஓசைகள் மீண்டும் மீண்டும் வருவதனால் தில்லானா திராரா என்று அழைக்கப்படுகின்றது. பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் பதத்திற்கு அடுத்தபடியாக அழகான சொற்கட்டுக்களில் பின்னிப்பிணைந்து இசை நயமிக்க ஸ்வரங்களால் ஆடப்படுகிறது.

அடுத்து ஜாவளி சிருங்கார ரஸத்தை மையமாகக் கொண்டவை. ஜாவடி என்னும் கன்னட சொல்லில் இருந்து ஜாவளி என்றாயிற்று என நூல்கள் கூறுகின்றன. ஜாவளி என்பது மராத்திய வழக்கு. மராட்டியர்களின் அரசவையில் வட இந்திய இசை வடிவங்களான தும்ரி, கயால், தரனா என்பன நிகழ்த்தப்பட்டன. அதே போன்று ஹிந்துஸ்தானி இசை செல்வாக்கு பெற இவை துணை

நிற்கின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி மொழிகளில் இதன் பாடல்கள் இடம்பெறுகின்றன. இப்பாடல்களில் தலைவனானவன் ஒரு ஏமாற்றுக்காரனாக சித்தரிக்கப்படுகின்றான். நர்த்தகியின் அபிநயத்திறமை இவ் உருப்படியில் வெளிப்படுத்தப்படும்.

அடுத்து பாலனா எனும் தாலாட்டுப் பாடல். இது குழந்தையை தொட்டிலிடும் போது தனி ஒருவரால் அல்லது குழுவாக இணைந்தோ பாடப்படுகின்றது. ராம நவமிää கோகுலாஷ்டமியின் போது ஆலயங்களில் உள்ள தொட்டிலில் கிருஷ்ணரின் உருவச் சிலையை இட்டு இத்தாலாட்டினை பாடிய வழக்கு உள்ளது. நாட்டிய கச்சேரிகளில் இன்று இவை அதிகமாக பின்பற்றப்படுவதில்லை.

தஞ்சை நால்வரின் பெரிய தந்தையான கல்கை முத்துப் பிள்ளையால் நவசந்தி கௌத்துவம் இயற்றப்பட்டது. இது மராட்டியர் காலத்தில் உருவாக்கப்பட்டதென்ற எண்ணம் இருந்தாலும், சிலப்பதிகாரத்தில் மாதவி நிலா கௌத்துவம் செய்ததாகவும், நிலா கௌத்துவத்திற்கு முன் நால்வகை பூத கௌத்துவங்களையும் செய்தாள் என கூறப்படுகின்றது.

அடுத்து சலாம் தருவை எடுத்துக் கொண்டால் நாட்டிய நாடகத்தில் தொடக்கத்திலும், முடிவிலும் சலாம் தரு செய்யப்பட்டுள்ளது. ஆடல் நங்கையர் தமது இடுப்பை வளைத்து சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துதலே சலாம் தருவாகும். தற்பொழுது இது வழக்கில் இல்லை.

மராட்டியர் காலத்தில் நடனத்திற்கு சிறப்பினை பெற்று தந்தவர்கள் இந்த தஞ்சை நால்வர் ஆவார். இவர்கள்

1. சின்னையா- கி.பி 1802
2. பொன்னையா- கி.பி 1804
3. சிவானந்தம் - கி.பி 1808
4. வடிவேலு – கி.பி 1810

இவர்கள் மன்னார் குடியை சார்ந்த சுப்புவிய நட்டுவனாரின் மகன்களாவார். இவர்களே தற்போதுள்ள பரதநாட்டிய கச்சேரி அமைப்பு முறையினை தந்தவர்களாவார். அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், தில்லானா, தரு,கௌத்துவம் என்பவையே அவை.

பொன்னையா பிள்ளை அவர்கள் இசைக்கு ஆரம்பப் பாடமான சரளி, ஜண்டை, அலங்காரம் என்பவையும் நாட்டியத்திற்கு அடிப்படையான தட்டு அடைவு, நாட்டு அடைவு, குதித்து அடைவு, ஜாதி அடைவு, தட்டு மெட்டு அடைவு, மெய் அடைவு, அறுதி அடைவு, மெட்டு அடைவு, தடை அடைவு, முடிவு அடைவ என்று பத்து அடைவுகளை தந்தவராவார்.

அத்துடன் நாட்டிய அரங்கேற்று உருப்படிகள் அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், பத வர்ணம், ஸ்வரஜதி, பதம், இராகமாலிகை, சுலோகம், தில்லானா என வரிசைப்படுத்தி தந்தவரும் இவரே. இவர் பல வர்ணங்களை பாடியுள்ளார்.

சின்னையா அவர்கள் மைசூர் அரண்மனை கலைஞராக பணியாற்றினார். இவர் பத வர்ணங்கள், கீர்த்தனைகள், ஜாவளிகள் என்பவற்றை இயற்றியுள்ளார்.

சிவானந்தம் ஆலயங்களில் நடனக் கலையை வளர்க்க இறைவனுக்குரிய சோடசோபசாரம், தீப ஆராதனை, தாள ஜதிகள், நிருத்தியம் போன்றவற்றிற்கு நிருத்திய நியதிகளை உண்டாக்கினார். பெண்களுக்கு நிகராக ஆண்களும் ஆட இயலும் என பண்டாரம் என்பவருக்கு நடனத்தை கற்பித்தார்.

வடிவேலு அவர்கள் மேல்நாட்டு இசைக்கருவியான வயலினை தமிழ் கர்நாடக இசைக்கு அறிமுகப்படுத்தினார். பெண்களுக்குரிய மோகினி ஆட்டத்தினை உருவாக்கியவரும் இவரே.

சிவானந்தத்திற்கு மகன்களாக சபாபதி, மகாதேவன் பிறந்தனர். இவர்களில் சபாபதிக்கு மகனும், மகாதேவனுக்கு மகளும் பிறந்தனர். மகாதேவனின் மகளை மீனாட்சி சுந்தரம் பிள்ளை மணந்தார். இவரின் வழியே தஞ்சை நால்வரின் முறை மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் பேணப்பட்டு பந்தனை நல்லூர் பாணி என வளர்ந்தது.

தஞ்சை நால்வர்களால் வகுக்கப்பட்ட நாட்டிய மார்க்கம், பின்னர் தஞ்சை வழி, வழுவூர் வழி, பந்தனை நல்லூர் வழி என மாற்றம் பெற்று இன்றளவும் பின்பற்றப்படுகின்றது. இவ்வாறு மராட்டியர் கால நடனமானது சிறப்புற்று திகழ்ந்துள்ளது.

துணை நூற்பட்டியல்

1. சிலப்பதிகாரம்
2. தென்னிந்திய வரலாறு
3. தஞ்சை வளர்த்த பரதக்கலை
4. தமிழ் இலக்கிய வரலாறு
5. தஞ்சை மராட்டியர் வளர்த்த தமிழ் இலக்கியம்
6. தஞ்சை மராட்டியர் வரலாறு
7. தமிழர் நடன வரலாறு
8. தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்
9. நாட்டியக்கலை